IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.243/2008
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.15p.m.

வா.சா. 1 சாட்சி போஸ் த.பெ.ராஜ் (எ) அழகர்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 24.03.2026 in accordance with the provisions of Act XX141.**

1 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒப்பந்தப்படி தீர்ப்பாக வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் என்றால் சரிதான். சிங்கராஜ்ன் தந்தை பெயர் என்ன என்றால் வேலுநாயக்கர் ஆகும். சிங்கராஜ்ன் உடன் பிறந்தவர் எத்தனை பேர் என்றால் 4 நபர்கள் ஆவார்கள். அவர்கள் முறையே துரைப்பாண்டி, பால்பாண்டி, இராமன் ஆவார்கள்.

2. கிரைய ஒப்பந்த தேதி தெரியுமா என்றால் 09.03.2005 ஆகும். கிரைய ஒப்பந்தச் சொத்து ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றால் வேலுநாயக்கர் பெயரில் இருந்தது. உச்சப்பட்டிக்கும், உரப்பனூருக்கும் எவ்வளவு தூரம் என்றால் 4 கி.மீ. இருக்கும். சர்வே எண் 1/2F ஆனது விவசாய நிலம் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது.

3. தாவாச் சொத்து சர்வே எண் 1/2Fல் எந்த பகுதியில் உள்ளது என்றால் தென்வடலாக உள்ளது. தாவாச் சொத்து யாருடைய

அனுபவத்தில் உள்ளது என்றால் நான்தான் அனுபவம் செய்து வருகிறேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் எனது ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். தாவாச்சொத்தை அனுபவம் செய்து வருவதற்கு ஆதரவாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

4. 2005ல் சர்வே எண் 1/2F வேலுநாயக்கர் பெயரில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி வேலுநாயக்கருக்கு எத்தனை மனைவி என்றால் 2மனைவிகள் ஆவார்கள். பாகப்பிரிவினைக்கு முன்பாக 1ம்பிரதிவாதிக்கு கிரையஒப்பந்தம் செய்ய எவ்வித உரிமையும் இல்லை என்றால் தெரியாது. கிரையஒப்பந்தத்தில் வேலுநாயக்கரின் வாரிசுகள் யாரும் சாட்சி கையெழுத்து செய்தார்களா என்றால் செய்யவில்லை.

5. வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் எங்குவைத்து எழுதப்பட்டது என்றால் உச்சப்பட்டியில் வைத்து எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 கிரையஒப்பந்தத்தை தயார் செய்தவர் பெயர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. மேற்படி பத்திரத்தை எழுதிக்கொடுத்தவர் பத்திர எழுத்தரா என்றால் பத்திர எழுத்தர்தான். கிரைய ஒப்பந்த தேதியில் இருந்து 3வருடம் கழித்துதான் இவ்வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

6. 2005ல் தாவாச் சொத்திற்கு வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. பொதுவாக சொத்தை கிரையம் வாங்குபவர்கள் வில்லங்கம் பார்த்துதான் வாங்குவார்கள் என்றால் தெரியாது. 2008ல்தான் சிங்கராஜ் மற்றும் அவரது சகோதர, சகோதரிகளுக்குகிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் 2005ல் ஏற்பட்டது.

7. சிங்கராஜ்க்கு கிடைத்த பங்கை அவருடைய மனைவி யசோதை பெயரில் தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு

ஒப்பந்தம் எழுதிக்கொடுத்த பின்புதான் தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார். வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே சிங்கராஜ் அவருடைய மனைவி யசோதை பெயரில் தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த பின்புதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது.

8. சிங்கராஜ் அவருடைய மனைவி யசோதை பெயரில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் செல்லாது என்று பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. சிங்கராஜ்க்கு நான் அனுப்பிய வழக்கு அறிவிப்பிற்கு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பில் சிங்கராஜ் மற்றும் அவரது உடன்பிறந்தவர்களுக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது.

9. இவ்வழக்கை தாக்கல் செய்யும்போது சிங்கராஜ் உடன்பிறந்தவர்களை தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை போலியாக உற்பத்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கும், சிங்கராஜ் தந்தை வேலுநாயக்கருக்கும் நிலப்பிரச்சனை இருந்ததா என்றால் தெரியாது.

10. தாவாச்சொத்து சிங்கராஜ்க்கு ஒதுக்கப்படவில்லை என்றால் ஒதுக்கப்பட்டது. சிங்கராஜ் அவருடைய மனைவி யசோதைக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை வைத்து 12ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. 12ம் பிரதிவாதி கிரையம் பெற்று பட்டா பெயர்மாற்றம் செய்து அவர் அனுபவம்

செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதிக்கு முன்பணம் நான் கொடுத்ததாக தவறாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

11. முன்விரோதம் காரணமாக வா.சா.ஆ.1ஐ உற்பத்தி செய்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தினை நான் எப்போதும் அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தினை கிரையம் பதிய எப்போதும் தயார இருந்தேன் என்று இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. 1ம்பிரதிவாதி தனது பெயரில் பட்டா மாற்றம் செய்து கிரையம் பதிந்து கொடுப்பதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. வழக்கு மூலம் இல்லாத இவ்வழக்கில் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:12.45p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.24 18:16:37 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.